O.S.No. 229/2011
29.01.2021

வா.சா.1. திரு.மலைச்சாமி என்ற அழகன் த.பெ.சின்னழகன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

கூடுதல் முதல் விசாரணை

நான் வாதி மற்றும் எனது தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 13.06.2008 தேதியிட்ட, எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட கிரய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ-1. பொ.க.அழகன், சின்னழகன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த 24.05.1998 தேதியிட்ட, சுவாதீன ஒத்தி பத்திரத்தின் அசல் வா.சா.ஆ- 2. 12.02.2000 தேதியிட்ட, மேற்படி சின்னழகன் பெயரில் உள்ள கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ-3. 28.04.2005 தேதியிட்ட, வே.சின்னழகன் பூசாரி பெயரில் உள்ள கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ-4. எனக்கு 30.06.2008 அன்று வி.சின்னழகன் எழுதிக்கொடுத்த ஒத்தி மேடோவர் பத்திரம் அசல் வா.சா.ஆ-5. எனது பெயரில் 09.03.2009 தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ-6. எனது பெயரில் உள்ள 07.03.2011 தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் வா.சா.ஆ-7. 17.06.2010 அன்று, நான் பி.கே.அழகனுக்கு எனது வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீது அசல் வா.சா.ஆ-8 வரிசை. பி.கே.அழகன் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ-9. 01.07.2010 அன்று பி.கே.அழகன் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு சார்பு நகல் வா.சா.ஆ-10.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

ஜெகந்நாதன் இந்நீதிமன்றத்தில், என் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அந்த வழக்கில் தான் கிரயம் வாங்கியதாக கூறி உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் உள்ள தாவா சொத்தும், இந்த வழக்கு தாவா சொத்தும் அந்த வழக்கின் சொத்தும் ஒன்றுதான் என்றால் சரிதான். அந்த வழகளு எண் என்ன என்றால் அ.வ.எண் 83/2018 ஆகும். மேற்படி வழக்கு ஜெகந்நாதன் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், அவர் வேண்டும் என்றே வழக்கை நடத்தாமல் இருந்தார். தாவா சொத்தை ஜெகந்நாதன் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தெரியும் என்றால், அ.வ.எண் 83/18 வழக்கு தாக்கல் செய்வதற்கு பத்து நாட்களுக்கு முன்புதான் தெரியும். மேற்படி வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் இந்த தாவா வழக்கின் பிராதை திருந்தம் செய்ய மனு செய்தோம் என்றால் சரியல்ல. ஜெகந்நாதன் தாவா சொத்தை கிரயம் வாங்கியது தெரிந்திருந்தும், அவரை வேண்டும் என்றே இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, இந்த வழக்கில் அவரை சேர்த்துள்ளோம். தாவா சொத்தில் இந்த வழக்கின் பிரதிவாதிக்கு உரிமை

O.S.No. 229/2011
29.01.2021

வா.சா.1. திரு.மலைச்சாமி என்ற அழகன் த.பெ.சின்னழகன்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கிடையாது என்பதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்வது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல, பிரதிவாதிக்கு உரிமை உண்டு. மேலூர், மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் ஜெகந்நாதன் மீது நான், அ.வ.எண். 467/2019 வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஜெகந்நாதன் தாவா சொத்தை கிரயம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு ஆரம்பத்தில் மதுரை, மாண்புமிகு ஒன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 32/2018 என்று தாக்கல் செய்யப்பட்டு, அதன்பிறகு மேலூர், சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, அ.வ.எண். 467/19 ஆக எண்ணிடப்பட்டது என்றால் சரிதான். அந்த அ.வ.எண் . 467/19 வழக்கில் தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் ஐந்து லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, கொய்யா மரத்தின் மதிப்பு தான் ஐந்து லட்சம் என்று குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்தின் மதிப்பு ரூபாய் ஐந்து லட்சம் இருக்கும் என்றால் சரியல்ல. இறந்து போன 1ம் பிரதிவாதி பி.கே.அழகன் எனது மைத்துனர் என்றால் சரிதான், 2ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி விட்டு கிரயம் செய்து கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். (பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.-1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)